பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 32 திங்கட்கிழமை (16.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 229

## தொப்பிகல வெற்றிக்கான பரிசுகள் புலிகளால் விரைவில் வழங்கப்படும்

### அதிர்ச்சி காத்திருக்கிறது என்கிறார் புலிகளின் இராணுவப் பேச்சாளர்



கொழும்பு,ஜூலை16

இலங்கை அரசுக்கு மேலதிக அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமான 'த நேஷன்' பத்திரிகைக்கு இராசையா இளந்திரையன் அளித்துள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை அரசு இரண்டு தடங்களில் பயணிக்கின்றது. போர் ஒருபுறம் மறுபுறம் அமைதி என்று கூறிவருகின்றது. இரண்டையும் அடையக்கூடிய சாத்தியம் அதற்கு இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கில் இல்லை என்கின்றனர். (08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பை புலிகள் தாக்குவது ஒருபோதும் முடியாத காரியம்

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 16

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்தப்படி கொழும்பில் இனித் தாக்குதல் நடத்த இயலாத அளவுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது.

-இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய தகவலில் அவர் கூறியதாவது:-

கொழும்பில் உள்ள பொருளாதார நிலைகள் தாக்கப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளமை குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. கடந்த ஆண்டு முதல் வலிந்த நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளும் போதெல்லாம் இத்தகைய அறிவிப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனால் அவர்களால் (08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்குக் கூடுதல் அதிகாரங்கள்

# அரசிடம் இணைத் தலைமை வலியுறுத்து

## சு.க.வின் யோசனை குறித்து அதிருப்தி

கொழும்பு,ஜூலை16

தமிழ் மக்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு இணைத் தலைமை நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளன.

கடந்த மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி முடிவு குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கைக்கான ஜேர் மனியத் தூதுவர் யூர்ஜென் வீர்த்தினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்வைக்கவேண்டும். சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடியவை அல்ல .

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் சபையிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பித்துள்ள மாவட்ட மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பான தீர்வு யோசனைகள் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. அதனைவிட கூடுதல் (08ஆம் பக்கம் பார்க்க)

### வியாழனன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில்

## சுதந்திர தின நிகழ்வு போன்று தொப்பிகல மீட்பு வெற்றி விழா

### வெற்றிப் பட்டயத்தை ஜனாதிபதிக்கு இராணுவத் தளபதி வழங்குவார்

கொழும்பு,ஜூலை16

தொப்பிகல கைப்பற்றப்பட்டமையை அரசு சுதந்திர தினத்திற்குச் சமமாக கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இக்கொண்டாட்ட வைபவங்கள் இம்மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் பிரதான கொண்டாட்ட வைபவ நிகழ்வு கொழும்பு- 07, சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கிழக்கு முற்றாகக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தும் வெற்றிப் பட்டயத்தை இராணுவ அதிகாரி (08ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரம் சிறைச்சாலையில் 28 தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,ஜூலை16

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 28 தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்க்கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதியில் சிங்களக் கைதிகளையும் தடுத்து வைத்துள்ளதால் தாம் அச்சம் அடைந்துள்ளதாகத் தெரிவித்து - சிறைச்சாலை (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சூட்டுக் காயங்களுடன் நான்கு ஆண்களின் சடலங்கள் மீட்பு!

### தவசிக்குளம் பிரதேசத்தில் வீதியோரத்தில் கண்டுபிடிப்பு

வவுனியா,ஜூலை 16

கண்கள் கட்டப்பட்டு கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் சூட்டுக் காயங்களுடன் சடலங்கள் மீட்கப்படும் அவலம் வவுனியாவில் மீண்டும் தொடங்கியிருக்கிறது.

வவுனியா தவசிக்குளம் பகுதியில் வீதியோரத்தில் நான்கு ஆண்களின் சடலங்கள் கண்கள் மூடிக்கட்டப்பட்டு, கைகள் பின்னால் பிணைக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சடலங்கள் நான்கும் வவுனியா, தவசிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுடையவை அல்ல என்று பொலிஸார் பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். எனினும் நேற்றுப் பிற்பகல்வரை அவை அடையாளம் காணப்படவில்லை.

இந்த நபர்கள் வேறொரு இடத்தில் (08ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற வளாகப் பகுதி முழுவதும் உயர் பாதுகாப்பு வலயமாகின்றது!

கொழும்பில் நாடாளுமன்ற வளாகம் அமைந்துள்ள பிரதேசம் முழுவதும் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கான பொலிஸ் அதிகாரி எஸ்.டி.ஏ.எஸ். குணவர்த்தன கூறியதாவது:-

பயங்கரவாதிகளின் தாக்குதல் இலக்காகக் கோட்டேப் பகுதியில் உள்ள நாடாளுமன்ற வளாகம் உள்ளது. ஆகையால் அது அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட உள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட உள்ளது. நாடாளுமன்ற வளாகத்தில் பணிபுரியும் பொலிஸார் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் பணியாற்றுவர். (08ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் மருத்துவமனை ஷெல் தாக்குதலினால் பேரழிவு

கிளிநொச்சி,ஜூலை 16

வவுனியா நகரப் பகுதியில் இருந்து அரசுப் படைகள் நடத்திய தொடர் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களினால் புளியங்குளம் மருத்துவமனை முற்றாக அழிந்து போயிருப்பதாகக் கிளிநொச்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சனிக்கிழமை இரவு 9 மணி முதல் நேற்று அதிகாலை வரை கடும் ஷெல் தாக்குதல்கள் வவுனியா யோசெப் முகாமிலிருந்து நடத்தப்பட்டன எனக் கூறப்படுகின்றது. புளியங்குளம் அரசினர் வைத்தியசாலை மீதும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் ஷெல்கள் செறிவாக விழ்ந்து வெடித்திருக்கின்றன. (08ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பிகல வெற்றி என்பது அரசின் அரசியல் வியாபாரமே!

கொழும்பு,ஜூலை 16

தொப்பிகல வெற்றி என்பது அரசின் அரசியல் வியாபாரமே என்று ஆங்கில வார ஏடான 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

அந்தப் பத்திரிகை தனது வாராந்த அரசியல் கட்டுரையிலேயே இப்படித் தெரிவித்துள்ளது.

அந்தக் கட்டுரையில் மக்களுக்கு அரசு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முற்படின் அதன் ஊழல்கள் வெளிப்படும். அதனை மூடி (08ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல வெற்றி என்பது உண்மையானது அல்ல!

கொழும்பு,ஜூலை 16

தொப்பிகல மீதான தாக்குதலைப் படையினர் ஆரம்பித்த பின்னர் அங்கிருந்து பெருமளவிலான இராணுவ தளபாடங்களுடன் விடுதலைப் புலிகள் இலகுவாக அகன்றுவிட்டனர். விடுதலைப் புலிகளைக் கொல்லாத போது அவர்களின் இராணுவ இயந்திரத்தை அழிக்காத போது தொப்பிகல வெற்றி என்பது உண்மையானதல்ல.

இவ்வாறு பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தனது வாராந்த பாதுகாப்புக் (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பாலமோட்டையில் ஊடுருவும் அணி மீது தாக்குதல்

கொழும்பு,ஜூலை 16

வவுனியா பாலமோட்டையில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அவரது சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

பாலமோட்டைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



37 வருட கல்விப் புலத்தில் கடந்த எட்டு வருட காலமாக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளராக சிறந்த சேவையாற்றி இன்று (16.07.2007) திங்கட்கிழமை மன நிறைவோடு ஓய்வுபெறும்

**இ.சிவஞானசுந்தரம்**

அவர்கள் தனது ஓய்வு காலத்தை மகிழ்ச்சியாக குடும்பத்தாரோடு கலந்திருக்க எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களை வேண்டுகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**

(62707) **யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை கோப்பாய்.**

## முயற்சி திறன் விருத்தி மையம்
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளம் படுத்தல் என்ற நோக்கத்தை அப்டிபடையாகக் கொண்டு எமது நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற 6 மாத கால புதிய தொழிற் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறிகள் | தகைமைகள் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| தமிழ் தட்டச்சு | G.C.E (O/L) வரை சித்தியடைந்திருத்தல் வேண்டும் | யாழ்ப்பாணம், இணுவில், கைதடி (வார, வாரஇறுதிநாள்கள்) |
| ஆங்கில தட்டச்சு | G.C.E (O/L) வரை சித்தியடைந்திருத்தல் வேண்டும் | யாழ்ப்பாணம், இணுவில் கைதடி (வார, வாரஇறுதிநாள்கள்) |
| ஆடைவடிவமைப்பு நுட்பம் | G.C.E (O/L) கற்றிருத்தல் வேண்டும் | யாழ்ப்பாணம், இணுவில் கைதடி (வார நாள்கள்) |
| மின்சார தொழில்நுட்பம் (House Wiring) | G.C.E (O/L) கற்றிருத்தல் வேண்டும் | யாழ்ப்பாணம் (வார இறுதிநாளகள்) |

**பதிவுக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்**

விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து **23.07.2007**ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

வகுப்பு ஆரம்பம்:- **வார நாள்கள் 25.07.2007**
**வார இறுதி நாள்கள் 28.07.2007**

- விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி -

**தலைவர்**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
**106, 4ஆம் குறுக்குத் தெரு**
**யாழ்ப்பாணம்.**

**தலைவர்**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
**M.C.Leod வைத்தியசாலை**
**இணுவில்.**
(கி.52934)

## மரண அறிவித்தல்
### *சின்னத்துரை மதியாபரணம்*

(களஞ்சியப் பொறுப்பாளர், இ.போ.ச. கோண்டாவில் டிப்போ)



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் 63,A.V. றோட், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மதியாபரணம் 14.07.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-நாகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நிக்லாஸ் - திரேசம்மா ஆகியோரின் மருமகனும், செல்வமணியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி, செல்லம்மா, மகேஸ்வரி, குமரையா, முருகையா ஆகியோரின் சகோதரனும் செல்வராணி, பயஸ் (முன்னாள் இ.போ.ச. ஊழியர்), ஜேசுரட்ணம், இராச ரட்ணம் (கொழும்புத்துறை), சர்வேஸ்வரி, செல்வரத்தினம், லீனஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

63 A.V. றோட்,
கொழும்புத்துறை.

தகவல்:
ம.செல்வமணி (மனைவி)
தொ.பே.: 222 9412

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆரியகுள சந்திக்கும், ஸ்ரான்லி வீதி புகையிரத நிலைய வீதிக்கும் இடையில் பிரான்சீஸ் விகோரி எமேர்சன் என்பவரின் தேசிய அ.அட்டை (883010698V) தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பெ.பிரான்சிஸ் (தந்தை), 45, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777 252083

## கண்ணீர் அஞ்சலி

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி வள்ளிப்பிள்ளை புஸ்பலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் **கந்தன் வைரமுத்து**

அவர்கள் 15.07.2007 அன்று காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
வதிரி, கரவெட்டி. யா/ வட மத்திய மகளிர் கல்லூரி.

## மரண அறிவித்தல்
### *சிவகுருநாதன் ரோகினிஅம்மா*



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் ரோகினி அம்மா 13.07.2007 வெள்ளிக்கிழமை பண்டாரிக்குளத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் சிவகுருநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரேசம்பிள்ளை, தியாகராசா மற்றும் நடராசா (ஆஸ்திரேலியா), தங்கச்சியம்மா, குலசேகரம்பிள்ளை (ஆஸ்திரேலியா), உருத்திரன் (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதராஜா (ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி), ரங்கராஜன் (பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபை), சௌந்தரராஜன் (பொறியியலாளர், பாஹ்ரயின்), பாக்கியலட்சுமி, விஜயலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் தர்மாம்பிகை, காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் செம்மனச்செல்வி, தர்மகுலசிங்கம் (கிராம அலுவலர்), மதிவதனி ஆகியோரின் மாமியும் அரவிந்தன் (லண்டன்), அனந்தன், அரங்கன் (சிங்கப்பூர்), அருணன் (மலேசியா), அகி லன் (மலேசியா), அஞ்சனன், மதுசூதனன், ஜனனி (அமெரிக்கா), கஜானி (கனடா), நளினி, மாலினி (ஜேர்மனி), கிருஷாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் சங்கீதா, ஏஞ்சலா, கௌதமி, சங்கீர்த்தனா, சரண்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15.07.2007) ஞாயிற்றுக் கிழமை வவுனியா பண்டாரிக்குளத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

162, பலாலி வீதி,
கந்தர்மடம். (62732)

தகவல்:
சிவஞானசுந்தரம் தங்கச்சிஅம்மா (சகோதரி)

## K.C.திருமணசேவை

அரச, உயர் பதவி, உள்நாடு - வெளிநாடு மணமக்களது ஜாதக குறிப்புகள் உண்டு.
தொடர்பு:
நேரம் காலை 9 மணி - 2 மணி வரை
இல. 49/1, பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு
தொ.பே. 4591223
(சந்திரன் கடை முன்பாக)

## விற்பனைக்கு

கொங்கிறிற் கற்கள் விற்பனைக்குண்டு
(4 x 12)
விலை 60/=
தொடர்பு:
T.P: 0777 242198

## விற்பனைக்கு

Honda Super Cup C 50 Self Start மோட்டார் சைக்கிள் (நீலம்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
S.S.நாதன்
இல.16/3,
விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்.
T.P: 0776146434

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர்**
**அன்ரன் டென்சில்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04.10.1984 | 16.07.2006 |

புன்னகையுடன் அன்பாகப் பார்க்கின்ற
அந்தப் பூ முகம்தான் எமை விட்டு
அகன்றிடுமோ? எம் அனைவர்
உள்ளங்களிலும் அணையாத தீபமாய்
விளங்கிடும் நீ விண்ணக வாழ்விலும்
விடியலாய் பிரகாசிக்க வேண்டும் என்று
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

21/4, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
பாஷையூர். (62725)

**- நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்
### *திருமதி பத்மநாயகி துரைசிங்கி (மானிப்பாய்)*



மானிப்பாய் கெலக் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி பத்மநாயகி துரைசிங்கி 14.07.2007 அன்று நியூசிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா துரைசிங்கி (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் லலிதாதேவி (Newzeland) ஜெயப்பிரதாதேவி (Inuvil), சிங்கவரோதயன் (Newzeland), Dr.ரவிராஜன் (U.K), சூரியகுமாரன்(Mauritius), நிஸ்கலாரூபி(Australia), பத்மலோஜனா (Canada), பத்மராஜன் (Technical officer, Jaffna Municipal Council), சந்திரிகா(U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.மகாதேவா (Newzeland), ஜெயநாதன் (Farmers Stores), அமிர்தினி (Newzeland), Dr. கௌரிமனோகரி (U.K), ஜெயந்திமாலா (Mauritius), ஸ்ரீரஞ்சன்(Australia), ஜெயதேவன் (Canada), நிரஞ்சினி (Vali East Pradeshiya Sabha, Puttur), விக்கிநல்லையா (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் பரிமலகாந்தி (Canada), M.A.ஹரி (Hari's Institute), புஷ்பகாந்தி, ஜெயரூபகாந்தி, ஜெயசந்திரகாந்தி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜெயலஷ்மி, இரத்தினசிங்கி, பூபாலசிங்கி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சதீஸ்கரன், சஞ்சீகரன், அனுஷா, ஜெனனி, பிரதீஷா, வைஷ்ணப்பிரியா, விஜித்வரோதயன், ராகுலன், சர்மிளா, கோபிகா, கோகுலன், பிரணவி, பவித்ரா, இந்துஜா, துர்ஷிகா, விஜயசீலன், சிவசாம்பவன், வைதேகி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாயீசனின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 19.07.2007 வியாழக்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும்.

Mrs.L.Mahadeva
381, Richardson Road
Mt.Roskill, Auckland,
Newzeland.
T.P.: 0064 96271124

தகவல்:
த.ஜெயநாதன் (மருமகன்),
பாடசாலை முன்பாக, இணுவில் கிழக்கு,
இணுவில். 0777 564806

## நெஞ்சகலா நினைவுகள்

**ஓராண்டு**



| மண்ணில் பிறப்பு | விண்ணில் பிறப்பு |
|---|---|
| 05 - 03 - 1922 | 16 - 07 - 2006 |

**செபமாலை அஞ்சலினா**
*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

**90 ஆவது ஜனனம்**
**10 ஆவது ஆண்டு**



| மண்ணில் பிறப்பு | விண்ணில் பிறப்பு |
|---|---|
| 16 - 07 - 1917 | 13 - 08 - 1997 |

**அகஸ்ரின் செபமாலை**
*(ஓய்வுபெற்ற அதிபர்)*

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்.
(2 தீமோ:4:7-8)

இவ்வுலகில் எம்மை ஈன்றெடுத்து
உதிரத்தை உணவாக்கியூட்டி
கல்வி அறிவு புகட்டி வளர்த்து
உருவாக்கிய கண்கண்ட தெய்வங்களே,
உங்கள் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாததே
நிலவுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த பெருமரம் நீங்கள் இன்று இல்லையே
நீரின்றிய தாவரம் போல் வாடி
உங்கள் பிரிவால் தவிக்கின்றோம்
நீங்காது எம் நெஞ்சைவிட்டு
உங்கள் நினைவுகள் உயிர் உள்ளவரை!

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (16.07.2007) திங்கட்கிழமை மு.ப.11.15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலியில் கலந்து கொண்டு இவர்களின் நித்திய இளைப்பாற்றுக்காகச் செபிக்கவும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவுத் துயரில் வாடும்:
**மேரிமல்லிகா ஜோன் அரியதாஸ்** (மகள்),
**ஜோ.ஜோன் அரியதாஸ்** (மருமகன்),
**செ. அருட்பிரகாசர் குரும்பத்தினர்** (மகன் - இத்தாலி),
**செ. அருளானந்தன் குரும்பத்தினர்** (மகன் - ஜேர்மனி).

இல. 220, குருசோ வீதி,
யாழ்ப்பாணம். (62727)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**உலகநாதன் கந்தசாமிபத்தர்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.11.1927 | 14.06.2007 |

யாழ்ப்பாணம் வட மேற்கு நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டு லண்டனில் அமரத்துவம் அடைந்த உலகநாதன் கந்தசாமிப் பத்தரின் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 14.07.2007 சனிக்கிழமை அவரது லண்டன் இல்லத்தில் நடைபெற்றன. அன்னாரின் மறைவுத்துயர் கேட்டு தங்களது அனுதாபங்களை எங்களோடு பகிர்ந்துகொண்ட அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் வண். வடமேற்கு நாவலடி பேச்சியம்மாள் ஆலய அறங்காவலர் சபையினருக்கும் அனுதாபம் தெரிவித்த அயலவர் அனைவருக்கும் எமது உளமார நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

91 BOY CROAT AVENUE,
KINGSBURY, LONDON NW9 8AL (62728)

02082005939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியேறிய மக்கள் மத்தியில் சென்று தொடர்ச்சியாகப் பணியாற்ற முடியவில்லை

## அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை

கொழும்பு ஜூலை 16

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியமர்த்தும் செயற்பாடுகள் பாரிய அளவில் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகிவிட்ட போதிலும், அப்பகுதிகளில் மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு குடியேற்றப்பட்டுள்ள சமூகங்கள் மத்தியில் தொடர்ச்சியாகச் சென்று செயலாற்றுவதற்கு முடியாமலிருக்கின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மேற்கு பிரதேசத்தில் இந்த நிலை நீடிப்பதாகக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மேற்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்திருந்த 85 ஆயிரம் மக்களை மீளக்குடியமர்த்தும் செயற்பாட்டை மே 14 ஆம் திகதி அரசு ஆரம்பித்தது. 2007 ஆண்டு மார்ச் மாதம் விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் மோதல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து அப்பகுதிகளிலிருந்து வெளியேறிய இம் மக்கள் பெரும்பாலும் கரையோரப்பகுதிகளில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களின் இல்லங்களிலும் வாழ்ந்துவந்துள்ளார்கள்.

தற்பொழுது இம்மக்கள் மீளவும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளமையால் அவர்களின் தேவைகள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடவும் புனர்வாழ்வுத்திட்டங்களை செயற்படுத்தவும் அரசசார்பற்ற அமைப்புகள் அவர்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வது அவசியம் என்று கருதப்படுகின்றது. ஆனால், அவர்கள் அங்குமிங்குமாக அதிகாரிகளால் இழுத்தடிக்கப்படுகிறார்கள் என்று மனிதாபிமான முகவர் அமைப்புக்களின் ஒன்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா கூறுகிறார். அப்பிரதேசங்களுக்குச் சென்று பணிகளை ஆரம்பிக்க சில நிறுவனங்கள் ஆயத்தமாக இருக்கின்றன. ஆனால், தொடர்ந்து செயற்படுவதற்கு அவர்களால் முடியாமலிருக்கிறது-என்றார் அவர். (ப)

# குடாநாட்டின் மூலை முடக்குகள் எங்கும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

குடாநாட்டில் தற்போது சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அசாதரண சூழ்நிலையைப் பயன்படுத்தி சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

கிராமங்கள் தோறும் மூலை முடக்குகள் எங்கும் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கசிப்பு உற்பத்தி செய்வோரிடம் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வோரின் தொகையும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

மனித உடம்பிற்குக் கேடு விளைவிக்கும் இந்த கசிப்பு உற்பத்தி தொடர்பாகத் தட்டி கேட்பதற்கு யாரும் இல்லையா என்று பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கசிப்பு விற்பனை செய்யும் இடங்களில் சென்று அதைக்குடித்து விட்டு வீதிகளில் சண்டையில் சிலர் ஈடுபடுவதால் கிராம மக்கள் அசெளகரியங்களுக்கு ஆளாகி உள்ளனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-224)



இணுவில் லயன்ஸ் கழகம் அண்மையில் நடத்திய புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடபிராந்திய மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவையும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட றோட்டேரியன் அ.பஞ்சலிங்கத்தையும் கழகத்தலைவர் லயன் கே.தேவராசாவும் புதிய தலைவர் லயன் எஸ்.கைலாசநாதனும் மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும்- கழகத்தின் சேவைத் திட்டத்தின் கீழ் கோண்டாவில் ம.விக்கு காதிதாதிகள் வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மானிப்பாயில் நிவாரண உணவுப் பொருள்

நவாலி, ஜூலை 16

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் வெள்ளை நிவாரண அட்டைகளுக்கு இரண்டாம், மூன்றாம் வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. (203-100)

## சேவாலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 16

யுத்தத்தால் உடல், உளரீதியாகப் பாதிப்படைந்துள்ள பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்கான விழிப்புணர்வுக் கண்காட்சியை சேவாலங்கா நிறுவனத்தினர் பாடசாலைகளில் நடத்தி வருகின்றனர்.

யுத்தத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் சிக்கலான உடலியல், உளவியல் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுவருகின்றனர்.

இத்தகைய பிரச்சினைகளை இனங்காணவும், அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் வகையிலும் விவரண சித்திர விழிப்புணர்வுக் கண்காட் சியையே சேவாலங்கா நிறுவனத்தினர் நடத்தி வருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரனையுடன் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணி மனையினரும் சேவலங்கா நிறுவனத்தின் சமூக உளவளப் பிரிவினரும் இணைந்து இக்கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளனர்.

'வாழ்வில் ஒரு வசந்த காலம் கட்டிளமைப் பருவம்' என்னும் கைநூலும் முதலு தவிப் பொருள்கள் அடங்கிய பையும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன.

இக்கண்காட்சியைத் தமது பாடசாலைகளிலும் நடத்த விரும்பும் அதிபர்கள் சேவாலங்கா நிறுவனத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-88)

# பாடசாலைகளில் தொப்பிகல மீட்பை தேசிய விழாவாக கொண்டாட ஏற்பாடு

தொப்பிகலவை மீட்டதை முன்னிட்டு அதனை பாடசாலைகளில் தேசிய விழாவாகக் கொண்டாடுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய சுற்றுநிருபங்கள் பாடசாலைகளுக்கு கடந்த வியாழக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொப்பிகலவை புலிகளிடமிருந்து இராணுவம் மீட்டதை தேசிய நிகழ்வாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


பாடசாலைகளில் நடைபெறும் இந்நிகழ்வின் போது யாழ்.குடாநாட்டை புலிகளிடமிருந்து இராணுவம் வெற்றி கொண்டதை விடவும் கடந்தகால இராணுவ வெற்றியை விடவும் தொப்பிகல வெற்றி மேலானதாக நடத்தப்பட வேண்டும்.

தேசிய நிகழ்வுக்கு இணையான நிகழ்வுகளை பாடசாலைகளில் ஏற்பாடு செய்வதற்காக 19 கட்டளைகளும், சிறப்புக் காரணங்களை பின்பற்றுமாறு 9 அறிவுறுத் தல்களும் விடுக்கப்பட்டுள்ளன.

இத்தேசிய நிகழ்வு எப்போது நடத்தப்பட வேண்மென பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்படவில்லை. தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கும் இக்கட்டளைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (சி)

# ரணில் மீது விசாரணை நடத்தவேண்டும்; நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்குக

## அமைச்சர் ஜெயராஜ் வலியுறுத்து



'வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை தொடர்பான பொய்யான தகவல்களைவழங்கி வருகின்றார் ரணில் விக்கிரம சிங்க எனவே அவரது இந்த நடவடிக்கை குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்றத்தில் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.'


-இவ்வாறு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இலங்கை அரசைப் பற்றி குறைகூறிவருகின்றார். இதன் மூலம் இலங்கைக்கு வெளிநாடுகளினால் கிடைக்கவிருக்கும் நிதி உதவிகளைத் தடுக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுவருகின்றார். அவர் அரசை வீழ்த்துவதிலேயே அதிக அக்கறை காட்டிவருகின்றார். ஆட்சியைக் கைப்பற்றுவதுதான் அவரது அடிப்படை நோக்கமாகும்.

கடந்த வாரத்தில் ... இடம்பெற்ற ... சந்திப்பின் போதும் அவர் இலங்கை அரசு குறித்து குறை கூறியுள்ளார். இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.



இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் கடத்தல், கப்பம் கோரல் பற்றிய உண்மைகளை கூறுகின்றேன் என அவர் தெரிவிக்கிறார். ஆனால் அவற்றில் எதுவித உண்மையுமில்லை.

ஆகவே இது தொடர்பாக விசாரணை செய்ய நாடாளுமன்றில் தெரிவுக்குழு ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் இந்துவில் நிறுவுநருக்கு உருவச்சிலை

வலி தென்மேற்கு, ஜூலை 16

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனரான அமரர் ப.செகராஜசிங்கத்தின் உருவச்சிலை கல்லூரியின் முன்றிலில் நிறுவப்படவுள்ளது.

இந்த உருவச் சிலையை உருவாக்கும் பணி முடிவடைந்துள்ளதாகவும் விரைவில் நடைபெறவுள்ள கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் திறந்து வைக்கப் படவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (202-135)

## கொடிவாரம்

கரவெட்டி, ஜூலை 16

யாழ்.மாவட்ட சிக்கன கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டுக் கரவெட்டிப் பிராந்திய சபை கொடி வாரத்தை நடத்தவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கொடிவாரத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். நிகழ்வில் விருந்தினர்களாகப் பிராந்திய சபைத் தலைவர் க.முத்துவேல், சமாச நெறியாளர் க.மகேந்திரன், வெளிக்கள உத்தியோகத்தர் க.தவச்செல்வன் உட்படப் பலர் கலந்துகொள்வர். (70)

## கல்வி நிர்வாக சேவை தடைதாண்டற் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 16

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. 01.03.2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் 1225/32ஆம் இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குரிய பாடவிதானங்கள், ஒழுங்கு விதிகள் என்பவற்றைப் பார்வையிடமுடியும்.

• விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 2007.07.13ஆம் திகதி அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-68)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் 'நெருக்கீட்டுக்குள் பெண்கள்' என்னும் தலைப்பில் முழுநாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத்தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல்வேறு பட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (203)

## புலமைப் பரிசில் பரீட்சை: தமிழ் மொழி மூல மாணவர் 70,209 பேர்

கொழும்பு, ஜூலை 16

அடுத்தமாதம் 19ஆம் திகதி நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 ஆயிரத்து 209பேர் தமிழ் மொழி மூல மாணவர்கள் ஆவர்.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி நடைபெற உள்ளது தெரிந்ததே.

இப்பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 93 ஆயிரத்து 937 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சைக்கென நாடளாவிய ரீதியில் 2ஆயிரத்து 624 பரீட்சை மத்திய நிலையங்களும் 479 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரசிங்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 324 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-203)

## அடிப்படை சிங்களப் பயிற்சி

கைதடி, ஜூலை 16

தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்திட்ட பணியகத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அரச ஊழியர்களுக்கான அடிப்படை சிங்கள பயிற்சி நெறி எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி சனி, ஞாயிறு நாள்களில் தினம் ஒன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் வீதம் நடைபெறும். (75-202)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




உடுப்பிட்டியைச் சேர்ந்த
**பாலமுருகன்-விஜயரூபி** தம்பதியரின் புத்திரன்
**செல்வன் சஞ்ஜய்**
தனது முதலாவது பிறந்த நாளை இன்று
(16.07.2007) திங்கட்கிழமை கொண்டாடுகிறார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார்,
அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார்,
மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்
அனைவரும் பல்லாண்டு காலம் நலமுடன்
வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (62662) **அப்பப்பா.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிறுவன இயக்குநரும்
உலக ஆன்மீக எழுச்சிப் பேரவை
பிராந்தியத் தலைவருமான
**செல்லையா**
**ஜெயபாலசிங்கம்**
அவர்களுக்கு தமிழ்நாடு
திருவாவடுதுறை ஆதீனம்
**'சிவனருட்சீலர்'**
என்ற பட்டத்தை வழங்கிக்
கௌரவித்தமையையிட்டு
பெருமகிழ்வடைகின்றோம். அவரது
அறப்பணிகளும்,
கல்விப் பணிகளும் மேலும்
சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இல.123, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (62699)
ஆசிரியர்கள், மாணவர்கள்,
**எவர்சைன் கல்வி நிறுவனம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
**திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்**
அவர்கள் 09.07.2007 அன்று யாழ்.மாவட்ட
நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா
முன்னிலையில் சமாதான நீதிவானாகச்
சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு
அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்,
கைதடி. (62711)
பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
**திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்**
அவர்கள் 09.07.2007 அன்று யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில்
நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சமாதான
நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு
அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல
பட்டங்களைப் பெற்று பல உயர் பதவிகளை வகிக்க
என்றென்றும் வாழ்த்துகின்றோம்.

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்,
கைதடி. (சி/52937)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தம்பிஐயா தங்கவேல்**
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வருமான வரி உத்தியோகத்தர்)


பிறப்பு 18✱01✱1945 — இறப்பு 16✱06✱2007

*16.06.2007 ஆம் திகதி இரவு எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குடும்பத் தலைவர் தம்பிஐயா தங்கவேல் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் செலுத்தி அஞ்சலி செய்த யாழ்.இந்துக் கல்லூரிச் சமூகம், யாழ்.முத்துத்தம்பி வித்தியாசாலைச் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை சகல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*அத்துடன் இன்று (16.07.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

மனைவி - தேவகி தங்கவேல் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்),
மகன் - த.நந்தகோபி (11A, யாழ்.இந்துக் கல்லூரி) (62678)
15/15A, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

## சி.வி.வேலுப்பிள்ளையின்



**வீடற்றவன்**
நாவலின்
**கதைச்சுருக்கம் -**
**விளக்கம் -**
**விமர்சனம்**
கலாபூஷணம்
**அராலியூர்**
**ந.சுந்தரம்பிள்ளை**
(62695)

## நன்றி நவிலல்



*08.07.2007 இல் அகால மரணமடைந்த*
**அமரர் அந்தோனி**
**கிருஸ்தோத்திரம் கிருபாகரன்**
*(கிராமசேவையாளர்)*

*அவர்களின் மரணச்செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்னும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்திய சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் மற்றும் கிராம சேவையாளர்களுக்கும் மாதகல் சென்தோமஸ் இளைஞர் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் வருகைதந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.*

**மனைவி** (குணசிலி, கேட்டி)
மாதகல்.
(62706)

## அறிவித்தல்

*யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் மகாசபை ஒன்று அமைக்கப்படவிருப்பதால் ஆலய திருவிழா உபயகாரர்கள், அடியார்கள், தொண்டர்கள் அனைவரும் தம்மை அங்கத்தவர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

**-கோயில் நிர்வாகம்.**
(சி- 52938)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்




தாயின் மடியில் 19 ★ 03 ★ 1935
இறைவன் அடியில் 16 ★ 07 ★ 2004

திருமதி
**திலகவதி கந்தசாமி**

திதி: சதுர்த்தசி 11.08.2007
எம் அன்பின் உறைவிடம்
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி
மூன்று ஆண்டுகள் கடந்தும் உங்கள்
நினைவு எம் நெஞ்சைவிட்டு
என்றென்றும் நீங்காது.
உங்கள் ஆத்மசாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்றோம்.
*என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:*
கணவர் Dr.K.கந்தசாமி (J.P.), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

கல்வத்தை,
கரவெட்டி.
(சி/52851)

## துயர் பகிர்கின்றோம்




*12.07.2007 அன்று அகால*
*மரணமடைந்த பருத்தித்துறை*
*கல்விக்கோட்ட அதிபர்*
*நலன்புரிச்சங்கத்தின்*
*மூத்த உறுப்பினரும் யா/தும்பளை*
*சிவப்பிரகாச அதிபருமான*
**அமரர் மணியம் கணபதிப்பிள்ளை**

*அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அதிபர் சங்கம்,**
**பருத்தித்துறைக் கோட்டம்.**
(சி/52932)

## மரண அறிவித்தல்

**திருமதி நவரட்ணம் முத்துலட்சுமி**



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் முத்துலட்சுமி 14.07.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா நவரட்ணத்தின் மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/1,கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
தகவல்:
**செ.நவரட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 12

## கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007

## பௌதிகவியல்

றோயல் கல்லூரி, கொழும்பு - 07.

### பகுதி - 1

01. ஒரு ஈர்க்கப்பட்ட கம்பியில் ஓரலகு கனவளவில் சேமிக்கப்பட்டுள்ள விகாரச்சக்தியின் பரிமாணத்திற்கு சமனான பரிமாணமுடைய கணியம்,
1) சக்தி. 2) உந்தம். 3) அமுக்கம். 4) வலு. 5) விசை.


02. ஒரு நுண்மானித் திருகுக் கணிச்சியின் இழிவு எண்ணிக்கை 0.01mm ஆகும். பூச்சிய வழு அருகேயுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. இத்திருகுக் கணிச்சியினை உபயோகித்து ஒரு கம்பியின் விட்டத்தை அளந்த போது 2.54( )காட்டியது. கம்பியின் உண்மையான விட்டம்,
1) 2.5mm 2) 2.56mm 3) 2.50mm 4) 2.54mm 5) 2.53mm

03. வித்தியாசமான திணிவுகளை உடைய இரு பொருட்கள் தொடுகையில் உள்ளன. இரு பொருட்களும் வெப்பச் சமநிலையில் இருப்பின் அவற்றிற்கிடையேயான பொதுப்பண்பு/பண்புகள்,
1) வெப்பக் கொள்ளளவும் வெப்பநிலையும்.
2) அகச்சக்தியும் வெப்பநிலையும். 3) அகச்சக்தி மட்டும்.
4) வெப்பநிலை மட்டும். 5) மேற்கூறிய எதுவும் இல்லை.

04. நிலையான நீரில் ஒருவனின் வேகம் $3ms^{-1}$ ஆகும். ஆறானது $1ms^{-1}$வேகத்தில் செல்லுகின்றது. ஆற்றங்கரை வழியே ஆறு செல்லும் திசைக்கு எதிர்த் திசையில் 30m தூரத்தில் உள்ள புள்ளியை அடைவதற்கு அவனிற்கு எடுக்கும் நேரம்,
1) 30s 2) 15s 3) 10s 4) 7.5s
5) அவனால் அப்புள்ளியை அளவிட முடியாது.

05. 2m ஆரையுடைய கிடையான வட்டப் பாதையில் இயங்கும் 2g திணிவின் ஆவர்த்தன காலம் 2s ஆகும். திணிவில் தாக்கும் விசை யாது?
1) 0.01N 2) 0.02N 3) 0.03N 4) 0.04N 5) 0.05N

06. எளிமை இசை இயக்கத்தை ஆற்றும் துணிக்கை ஒன்றின் இடப்பெயர்ச்சி நேர-வரைபு அருகே தரப்பட்டுள்ளது.




இதற்கு ஒத்த மேலேயுள்ள இரு வரைபுகளிலும் y அச்சு குறிப்பது முறையே,
1) வேகம், இயக்கசக்தி. 2) ஆர்முடுகல், வேகம்.
3) ஆர்முடுகல், அழுத்தசக்தி. 4) வேகம், விசை.
5) வேகம், அழுத்தசக்தி.

07. அறைவெப்பநிலையில் ஒரு முகவையினுள் உள்ள திரவத்தின் அடர்த்தி x ஆகும். முகவை சூடாக்கப்பட்டு அதனுள் உள்ள திரவத்தின் வெப்பநிலையை θ°C இனால் அதிகரித்த போது திரவத்தின் அடர்த்தி y ஆகும். திரவத்தின் உண்மை விரிகைத்திறன் $\gamma_r$ உம் தோற்ற விரிகைத்திறன் $\gamma_a$ உம் எனின்,
1) $x = y/1+\gamma_a\theta$ 2) $y = x/1+\gamma_a\theta$ 3) $x = y/1+\gamma_r\theta$
4) $y = x/1+\gamma_r\theta$ 5) $y = x$

08. இறுவட்டு இயந்திரத்தில் CD Player உள்ள இறுவட்டு ஒன்று 80சுழற்சி/min என்னும் வீதத்தில் சுழல்கிறது. புள்ளி A ஆனது இறுவட்டில் பரிதியில் உள்ள ஒரு புள்ளி ஆகும். புள்ளி B ஆனது இறுவட்டின் மையப்புள்ளிக்கும் A இற்கும் இடையிலான நடுப்புள்ளி ஆகும். முறையே A இலும் B இலும் உள்ள ஆர்முடுகல்களுக்கு இடையிலான விகிதம்,
1) 1:1 2) 1:2 3) 2:1 4) 1:4 5) 4:1

09. x,y,z என்னும் மூன்று பொருட்கள் ஒன்றின் மேல் ஒன்று வைக்கப் பட்டு நீரில் மிதக்கவிடப்படுகின்றது. இம் மூன்று பொருட்களின் நிறைகள் முறையே 2N,4N,5N ஆகும். z இன் ஒரு பகுதி அமிழ்த்தப் பட்டிருப்பின் y இல் தாக்கும் விசை,
1) 0 2) 2N 3) 3N 4) 5N 5) 6N






10. தரப்பட்ட வாயு ஒன்றின் அமுக்கம் p இல் சராசரி வேகவர்க்க இடை மூலப்பெறுமானம் (r.m.s) ஆனது C ஆகும். இவ்வாயுவின் அமுக்கம் ஆனது 3p இனால் அதிகரிக்கப்படும் போது புதிய சராசரி வேகவர்க்க இடைமூலப் பெறுமானம்,
1) C 2) 1/9C 3) $\sqrt{3}C$ 4) 3C 5) 9C

11. அரியம் ஒன்றினுள் வளியில் இழிவு விலகல் நிலையில் கதிர் ஒன்று உட்புகுகிறது. முதலாம் முகத்தில் படுகோணம் $i_1$ உம் முதலாம் முகத்தில் முறிகோணம் $r_1$ உம் ஆகும். இப்போது அரியமானது அதனிலும் ஒளியியல் அடர்த்தி குறைந்த ஊடகத்தினுள் வைக்கப்படுகிறது. இவ் ஊடகத்தினுள் கதிரானது இழிவு விலகல் நிலையில் புகுகிறது எனில் முதலாம் முகத்தில் படுகோணம் $i_2$ ஆகவும் இரண்டாம் முகத்தில் படுகோணம் $r_1$ ஆகவும் இருப்பின்,
1) $i_1 = i_2, r_1 = r_2$ 2) $i_1 > i_2, r_1 = r_2$ 3) $i_1 < i_2, r_1 < r_2$
4) $i_1 < i_2, r_1 = r_2$ 5) $i_1 = i_2, r_1 > r_2$

12. இரு முனைகளும் திறந்த மயிர்த்துளைக் குழாய் ஒன்று நிலைக்குத்தாகத் திரவம் ஒன்றினுள் தாழ்த்தப்படுகிறது. மயிர்த்துளை எழுகையை அதிகரிப்பதற்கு,
A) குழாயின் ஆரையை அதிகரித்தல் வேண்டும்.
B) வளிமண்டல அமுக்கத்தை அதிகரிக்க வேண்டும்.
C) வெப்பநிலையை அதிகரிக்க வேண்டும்.
இக்கூற்றுக்களில் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A யும் C யும் மட்டும். 5) மேற்கூறிய எதுவும் இல்லை.

13. மாறா வெப்பநிலையில் பேணப்பட்ட கடத்தி ஒன்றினூடு ஒரு மாறுபடும் மின்னோட்டம் பாய்கிறது. மின்னோட்டத்துடன் வலு இழப்பைக் காட்டும் சரியான வரைபு,



14. l நீளமுடைய ஒரு முனை மூடிய குழாயின் அடிப்படையில் ஒலிக்கப்படும் போது பெறப்படும் அலைநீளம் ஆனது,
1) 4l இலும் சற்றுக் குறைவானது. 2) 4l இலும் சற்று அதிகமானது.
3) 2l இலும் சற்றுக் குறைவானது. 4) 2l இலும் சற்று அதிகமானது.
5) அண்ணளவாக 31/2 இற்குச் சமனாகும்.

15. ஒரு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இயந்திரம் 10GW வீதத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இயந்திரம் 80% வினைத்திறன் உடையதாயின் இயந்திரத்திற்குக் கொடுக்கும் வலு.
1) $1.25\times10^7W$ 2) $1.25\times10^7W$ 3) $1.25\times10^{10}W$
4) $8\times10^9W$ 5) $8\times10^{11}W$


16. P அமுக்கத்திலும் T வெப்பநிலையிலும் ஒரு குறிக்கப்பட்ட திணிவு நிலை வாயுவின் ஓரலகு கனவளவில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை N ஆகும். வெப்பநிலை 2T ஆக அதிகரித்தும் அமுக்கம் 0.5P இற்குக் குறைத்தும் உள்ள போது மூலக்கூறுகளின் எண்ணிக்கை,
1) 0.25N 2) 0.5N 3) 1N 4) 2N 5) 4N

17. ஒரு கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் தேய்வு மாறிலி,
1) அரை ஆயுட் காலத்தில் தேய்வுறும் கதிரிப்பு அணுக்கருக்களின் எண்ணிக்கை.
2) ஓரலகு நேரத்தில் தேய்வுறும் கதிரிப்பு அணுக்கருக்களின் எண்ணிக்கை.
3) தேய்வு வீதத்தினை (Rate of decay) கொடுக்கும் சமன்பாட்டில் உள்ள விகிதசம மாறிலி.
4) நிலையற்ற அணுக்கரு (Unstable Nuclei) ஆரம்பத்தில் உள்ள பெறுமதியின் அரைவாசி ஆவதற்கு எடுக்கும் நேரம்.
5) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை.


18. ஒரு ஈர்க்கப்பட்ட கம்பி வழியே செல்லும் நிலையான அலையினை உரு காட்டுகிறது. ஒரே விசத்தினையும் ஒரே அவத்தையினையும் ஒரே அதிர்வெண்ணையும் குறிக்கும் புள்ளிகள்,

| | ஒரே விசம். | ஒரே அவத்தை. | ஒரே அதிர்வெண். |
|---|---|---|---|
| 1) | X உம் Y உம் | X உம் Z உம் | X உம் Z உம் |
| 2) | X உம் Z உம் | Y உம் Z உம் | X உம் Z உம் |
| 3) | X உம் Y உம் Z உம் | X உம் Y உம் | X உம் Y உம் Z உம் |
| 4) | X உம் Z உம் | X உம் Y உம் | X உம் Y உம் Z உம் |
| 5) | X உம் Z உம் | X உம் Y உம் | சமனானபுள்ளிகள் இல்லை. |

19. ஒரு சிறிய திண்மக்கோளம் ஒன்று ஓர் உருளைப் பாத்திரத்தில் உள்ள பிசுக்குமைப் பாயியினுள் போடப்படுகிறது. அக்கோளம் ஆனது இடப்பெயர்ச்சியுடனான(s) வேகத்தின்(v) மாற்றத்தை தருக் கோடு காட்டுகிறது. இச்சிறிய உருளை ஆனது புவியீர்ப்பு ஆர்முடுகலிலும் பார்க்க குறைந்த பிரதேசத்தில் வைக்கப்பட்டு போடப்படுகிறது. இதன் மாற்றத்தை குறிப்பிட்ட கோட்டினால் குறிக்கும்படின் சிறந்த வரைபைக் காட்டுவது.




20. ஒரு பொருளின் வேகம் V ஆனது நேரம் t உடன் மாறுபடுவதைக் குறிக்கும் சமன்பாடு V=kt இங்கு k>0 ஆகிய ஒரு மாறிலி ஆகும். வேகமாற்றத்தினை இடப்பெயர்ச்சியுடன் சரியாகக் காட்டும் வரைபானது,



21. ஆடலோட்ட மின்னோட்டம் ஆனது $I=I_0Sin\omega t$ என்னும் சமன்பாட்டினால் தரப்படுகின்றது. மின்னோட்டத்தின் r.m.s பெறுமானம் 40mA. அலைவுகாலம் 2.5ns மின்னோட்டத்தின் உச்சப் பெறுமானம் $I_0$ உம் அதிர்வெண் f உம் முறையே,


| | $I_0$(mA) | f(Hz) |
|---|---|---|
| 1) | 28 | 400 |
| 2) | 28 | $400\times10^3$ |
| 3) | 40 | $400\times10^3$ |
| 4) | 57 | 400 |
| 5) | 57 | $400\times10^3$ |

22. 5m நீளமான கோல் AB ஆனது இரு நிலைக்குத்து இழைகளினால் கிடையாகத் தொங்கவிடப் பட்டுள்ளது. முனை A இலிருந்து 1m தூரத்தில் 20N சுமை தொங்கவிடப்பட்டால் ஒவ்வொரு இழைகளினதும் இழுவிசை 25N இற்குச் சமனாகும். பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A) கோலின் திணிவு 3kg.
B) கோலின் புவியீர்ப்பு மையம் A யிற்கு அண்மித்ததாகும்.
C) 20N சுமை நீக்கப்படின் ஒவ்வொரு இழைகளினதும் இழுவிசை 15N இற்குச் சமனாகும்.
மேற்படி கூற்றுக்களில் சரியான கூற்று/கூற்றுக்கள்,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A யும் B யும் மட்டும். 5) A யும் C யும் மட்டும்.





23. படத்தில் காட்டியவாறு ஒரு சிறிய இருவாயி இரு தடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேல் புள்ளியில் 12V அழுத்தம் கொடுக்கப்படும் கீழ் புள்ளி புவிக்குத் தொடுக்கப்படும் போது புள்ளி X இல் 4V இனைத் தரும் சுற்றானது,



மிகுதி அடுத்தவாரம்.........

## கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007

## இரசாயனவியல்

றோயல் கல்லூரி, கொழும்பு - 07.


### பகுதி - 1

01. சோடி சேராத ஆறு இலத்திரன்களைக் கொண்ட மூலகச் சோடிகளின் அணு எண்கள்
1) 24,43 2) 21,97 3) 24,42 4) 22,42 5) 22,42

02. K,Ca,Se,Kr,Br ஆகிய மூலகங்களில் எவை முறையே தாழ்ந்த, உயர்ந்த அயனாக்கற் சக்திகளைக் கொண்ட மூலகச் சோடிகள்
1) K,Br 2) K ,Kr 3) Se ,K 4) Ca ,Kr 5) Ca ,Se

03. பின்வரும் சோடிகளில் எது உயர்ந்த இடைக்கவர்ச்சி விசைகளைக் கொண்டது
1) $H_2O,H_2O$ 2) HF, HF 3) $NH_3$, $NH_3$
4) HF,F- 5) $CH_3OH$, $H_2O$

04. $SF_4$ இன் முப்பரிமாணக் கட்டமைப்பை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுவது



05. 0.1mol tin (ii) thiosulphate உடன் தாக்கம் புரியத் தேவையான அமில $KMnO_4$ இன் மூல் எண்ணிக்கை
1) 0.133 2) 0.75 3) 0.08 4) 0.125 5) 0.06


06. பின்வரும் Cl சேர்வைகளில் முறையே அயன், அயன் பங்கீட்டு, பங்கீட்டு சேர்வைகளைச் சரியான வரிசையில் கொண்டது
1) HOCl, HClO, KOCl 2) $Ca(ClO)_2$, $NCl_3$, $PbCl_4$
3) HCl, NHCl, NOCl 4) NaCl, ICl, $NCl_3$ 5) $CaCl_2$, $Ca(ClO_2)$, $PbCl_4$

07. 3.09g ஒரு வலுவளவு உலோக நைத்திரேற்று முற்றாக வெப்பப்பிரிகை அடைந்து 3.58g திண்ம மீதியைக் கொடுத்தது. உலோகத்தின் சாரணுத்திணிவு
1) 23 2) 39 3) 133 4) 137 5) 148

08. $C_3H_5Cl$ ஐ மூலக்கூற்றுச் சூத்திரமாகக் கொண்ட சேர்வைக்கு சாத்தியமான சமபகுதியங்களின் எண்ணிக்கை
1) 4 2) 5 3) 6 4) 7 5) 8

09. $CH_3CH(OH)CH_2COCH_2C{\equiv}CH$ இன் பெயர்
1) 6-hydroxyhept-1-yne-4-one 2) 6-hydroxyheptyn-4-one
3) 2-hydroxyhept-6-yn-4-one 4) 6-hydroxyhept-1-yn-4-one
5) 2-hydroxyhept-6-yne-4-one

10. வயிற்றினுள் அஸ்பிரின் ஆனது அமிலப் பழச்சாற்றால் நீர்ப்பகுப்பிற்கு உட்படும் போது பெறப்படும் விளைவுகள்



11. $7N_2O_{4(l)} + C_5H_{20(l)} \rightarrow 9CO_{2(g)} + 10H_2O_{(g)} + 7N_2O$

161.0g $N_2O_{4(l)}$ ஆனது 64.0g$CO_{2(g)}$ உடன் முற்றாகத் தாக்கமுற்று உருவாகிய வாயுவின் கனவளவு STP இல் ( N=14, O=16, H=1 STP இல் வாயுவின் மூலர்க் கனவளவு $22.4dm^3$ எனவும் இவ்வாயு இலட்சிய நடத்தை உடையது எனவும் கொள்க.)
1) $291.2dm^3$ 2) $145.6dm^3$ 3) $14.56dm^3$
4) $2.912dm^3$ 5) $89.6dm^3$

12. பின்வரும் தாண்டல் உலோக ஒட்சைட்டுத் தொடர்களில் ஈரியல்பை மட்டும் கொண்டவை
1) ZnO, $TiO_2$, V2$O_5$ 2) $Sc_2O_3$, $MnO_2$, MnO
3) $Cr_2O_3$, $V_2O_5$, $TiO_2$ 4) $Cr_2O_3$, $MnO_2$, $VO_2$ 5) ZnO, $Cr_2O_3$, MnO

13. 30.0g ethanoic acid உம் 45g நீரும் கொண்ட கலவைக்கு 15.0g methanol சேர்க்கும் போது நீரின் மூல் பின்னத்தில் ஏற்படும் மாற்றம் (H=1, O=16, C=12)
1) 0.142 2) 0.119 3) 0.166 4) 0.714 5) 0.833

14. பின்வருவனவற்றில் எதில் எல்லா காபன்-காபன் பிணைப்பு நீளங்களும் சமனாகக் காணப்படும்
1) $CH_3CH=CH_2$ 2) $CH_3CH=CHCH_3$ 3) $CH_2=CHCH_2CH_2$
4) $CH_2=CHCH_2$ 5) $CH{\equiv}C\text{-}C{\equiv}CH$

15. "நைதரசனின் ஒட்சைட்டுக்களின் நியமத் தோன்றல் வெப்ப உள்ளுறை பெரும்பாலும் புறவெப்பம்" மேலேயுள்ள கூற்றை நிருபிப்பதற்கு பின்வருவனவற்றில் எது மிகவும் பொருத்தமானது.
1) நைதரசனின் உயர் இலத்திரன் நாட்டம்.
2) நைதரசனின் உயர் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை.
3) நைதரசனினதும் ஒட்சிசனினதும் மின்னெதிர்த் தன்மை பெருமளவில் ஒத்தமை.
4) ஒட்சிசனின் உயர் இலத்திரன் நாட்டம்.
5) ஒட்சிசன் அணுவால் $O^{2}$ அயனை உருவாக்குவதற்கு உரிய வல்லமை.

16. $Fe^{2+}$ ஐயும் $Fe^{3+}$ ஐயும் கொண்ட கரைசல் A இனுள் பிளாற்றினம் கோல் பகுதியாக அமிழ்த்தப் பட்டுள்ளது. $Fe^{2+}_{(aq)}$ கரைசல் B இனுள் இரும்புக்கோல் பகுதியாக அமிழ்த்தப்பட்டுள்ளது.
A,B என்பன உப்புப் பாலத்தினூடு இணைக்கப்பட்டுள்ளது. Aயும் Bயும் வெளிச் சுற்றில் வோல்ற்மானிக்கு இணைக்கப்பட்டுள்ளது.

$Fe^{2+}/Fe_{(aq)}$ E = -0.44 V

$Fe^{3+}_{(aq)}/Fe^{2+}_{(aq)}$ E = +0.77 V

மேற்படி கலத்தைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது.
1) மின்னோட்டம் A இலிருந்து B இற்குச் செல்லும் அதேநேரம் கலத்தின் மின்முத்தம் 1.21V ஆகும்.
2) மின்னோட்டம் B இலிருந்து A இற்குச் செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 1.21V ஆகும்.
3) மின்னோட்டம் A இலிருந்து B இற்குச் செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 0.33V ஆகும்.
4) மின்னோட்டம் B இலிருந்து A இற்குச் செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 0.33V ஆகும்.
5) இலத்திரன் பாய்ச்சல் கதோட்டு B இலிருந்து அனோட்டிற்குப் பாயும் போது A ஆனது அனோட்டாகச் செயற்படும்.

17. பின்வரும் ஒட்சைட்டுக்களில் எது (Caustic Potash) எரிபற்றாகக் கரைசலில் கரைதிறன் மிகவும் குறைந்தது எது?
1) $Al_2O_3$ 2) MgO 3) $P_4O_{10}$ 4) $SiO_2$ 5) $B_2O_3$

18. பின்வரும் அமிலத் தொடர்களில் எது அமில வலிமையின் ஏறுவரிசை/இறங்குவரிசை ஒழுங்குப்படி காணப்படுகிறது?
1) $H_3PO_3$, $H_3PO_4$, $H_2SO_4$ 2) $H_3PO_3$, $H_3PO_4$, $H_2S_2O_7$
3) $H_3PO_2$, $H_2C_2O_4$, $H_3PO_4$ 4) $H_3PO_2$, $H_2SO_4$, $HClO_3$ 5) $H_3PO_2$, $(HPO_3)_3$, $HIO_4$

19. அமோனியம் பெரிக்குச் சல்பேற்றின் (ammonium nospare ferric sulphate) சூத்திரம் $(NH_4)_2SO_4.Fe(SO_4)_3.2H_2O$ $1.5055\times10^{23}$ ஐதரசன் அணுக்களைக் கொண்ட மேற்படி உப்பின் திணிவு
1) 4.3g 2) $4.13\times10^{-2}$g 3) 43.0g
4) $4.13\times10^{-3}$g 5) 41.3g

20. இருவலுவிலுள்ள உலோகம் A இன் குளோரைட்டு C, சல்பேற்றுS, பொசுபேற்று P ஆகியவற்றின் கரைதிறன் பெருக்கங்கள் முறையே $8\times10^{-12}mol^3dm^{-9}$, $4\times10^{-12}mol^2dm^{-6}$, $1.08\times10^{-12}mol^5dm^{-15}$ ஆகும். A இன் நிரம்பிய ஒவ்வொரு உப்புக் கரைசல்களின் $100cm^3$ இலும் காணப்படும் $A^{2+}$ அயன்களின் அளவுகளின் ஏறுவரிசை
1) C,S,P 2) C,P,S 3) S,P,C 4) P,S,C 5) S,C,P

21. $CH_3OH$ உம் $CH_3CH_2OH$ உம் திணிவு ரீதியில் 4.23 ஐக் கொண்ட இலட்சியக் கரைசலை ஆக்கும்.குறித்த வெப்பநிலையில் மூடிய தொகுதி ஒன்றில் இக்கரைசலானது அதன் ஆவியுடன் சமநிலையில் உள்ளது. இவ்வெப்பநிலையில் மெதனோல், எதனோல் என்பவற்றின் ஆவி அமுக்கங்கள் முறையே 80mmHg,60mmHg ஆகும். இவ்வெப்பநிலையில் கரைசலின்மேல் உஞற்றப்படும் ஆவி அமுக்கம்
1) 76mmHg 2) 72mmHg 3) 74mmHg
4) 66mmHg 5) 64mmHg

22. $10moldm^{-3}CH_3COOH$ நீர்க்கரைசலைக் கருதுக. மேற்படி நீர்க்கரைசலைப் பற்றி உண்மையானது
1) காய்ச்சி வடித்த நீரைச் சேர்ப்பதன் மூலம் இதன் செறிவை 10 மடங்காக ஐதாக்கும் போது பெறப்படும் கரைசலின் pH4 ஆகும்.
2) இதற்கு NaOH கரைசலைச் சேர்க்கும் போது இதன் pH அதிகரிக்கும்.
3) இதன் கரைசலை 100 மடங்காக ஐதாக்கும் போது $OH^-$ இன் செறிவு 100 மடங்காகக் குறைவடையும்.
4) இதற்கு $HCl_{(aq)}$ சேர்க்கும் போது pH பெறுமானம் அதிகரிக்கும்.
5) இதற்கு காய்ச்சி வடித்த நீர் சேர்க்கும் போது கூட்டற்பிரிவின் அளவு அதிகரிக்கும்.

23. குறித்த சேர்வை ஒன்று,
தொலனின் சோதனைப் பொருளுடன் தாக்கம் புரியும்.
இலகுவில் ஒட்சியேற்றப்படவும் தாழ்த்தப்படவும் கூடியது.
Conc $H_2SO_4$ இனால் நீரகற்றப்படக் கூடியது.
பீலிங்கின் கரைசலுடன் தாக்கம் புரியும்.
இச்சேர்வையாக இருக்கக் கூடியது,
1) ethanoic acid 2) ethanol 3) propanone
4) methanal 5) methanoic acid

24. P $CH_3COCl \xrightarrow{C_6H_5NH_2}$

Q $CH_3COCH_3 \xrightarrow{dil\ NaOH}$

R $C_3H_5COCH_3 \xrightarrow{C_6H_5NHNH_2}$

மேற்படி தாக்கங்களின் பொறிமுறையைக் கருதுக.
a) கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கம் மட்டும். ($S_N$)
b) கருநாட்டக் கூட்டல் தாக்கம் மட்டும். ($A_N$)
c) கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கமும் நீக்கல் தாக்கமும்.($S_N$,E)
d) கருநாட்டக் கூட்டல் தாக்கமும் நீக்கல் தாக்கமும்.($A_N$,E)
மேலே தரப்பட்ட தாக்கங்கள் P,Q,R ஆகியவற்றின் பொறிமுறைகளின் சரியான ஒழுங்கு.
1) a,b,d 2) a,d,b 3) b,c,d 4) c,b,d 5) c,b,d

மிகுதி அடுத்தவாரம்.........

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கைதடி ப.நோ.கூ.சங்கப் பொதுமுகாமையாளருமாகிய

**சோமசுந்தரம் ஸ்ரீதரன்**

அவர்கள் 12.07.2007 அன்று இறைபதமடைந்தமையயிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன், அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ப.நோ.கூ.சங்கம், உடுப்பிட்டி. — தலைவர், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள். (இ/52935)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts in the Sports Science Unit up to 30.07.2007

Visiting Lecturer in Physical Education for the following fields
Counseling and Career Guidance/ Carom/ Tennis/ Elle/ Thachchi/ Kabadi

Visiting Instructor in Physical Education for the following fields
Carom/ Tennis/ Ellel/ Thachchi/ Kabadi

Rate of payment

| Post | Rate |
|---|---|
| Visiting Lecturer | Rs.300/- per hour |
| Visiting Instructor | Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior *Assistant* Registrar/ Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.IOO/- per form at the People's Bank, University Branch or at the Shroff 's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University ot Jaffna together with a self - addressed Rs.5.00 stamped envelope 23x10 c.m. in. size.

Those who wish to apply for more than one post/ field sbould make separate applications.

Applicants from the University System/Govemment Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

REGISTRAR
13.07.2007

(C/52914)

## CD கள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4 ACDகள்+ 20 VCD களில் உள்ளடக்கப்பட்டுள்ளது பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்ல கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தது. ஆங்கில ஆசிரியர் களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம் முயற்சி உடையவர்கள் இதன்மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேச கற்றுக்கெள்ளலாம.

முன்பதிவுகள் செய்து கொள்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்
*முன்பதிவுகள் நடைபெறுகின்றன. முன்பதிவுசெய்யும் இடங்கள*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி) 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம் சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 021 2223795 | காவேரி பார்மசி கொக்குவில் சந்தி, கொக்குவில். |
| ராஜலஷ்மி மல்ரி பலஸ் நெல்லியடி, கரவெட்டி. (பஸ் நிலையத்திற்கு முன்னால்) | மெடிலான்ட் பார்மசி ஆலடி சந்தி, மானிப்பாய். |
| றேனி மூக்கு கண்ணாடி அகம் கண்டி றோட், (AGA's Office அருகில்) சாவகச்சேரி. | Thurka Book shop Bus stand Chunnagam. 021 222 6267 |
| றேனி மூக்கு கண்ணாடி அகம் 88, பிரதான வீதி, பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி பிரதான வீதி, சங்கானை. |

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி,
கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின்
பொது முகாமையாளருமாகிய

**சோமசுந்தரம் ஸ்ரீதரன்**

அவர்களது மரணச் செய்தி கேட்டு துயரடைகிறோம். எமது கூட்டுறவுக் குடும்பத்தின் ஒருவனாக, கண்ணியம் மிகு பணியாளனாக நேற்றுவரை எம்முடன் இருந்த அமரர் ஸ்ரீதரனின் இழப்பு அன்னாரின் குடும்பத்திற்கும், கூட்டுறவுத்துறைக்கும் பாரிய இழப்பாகும். அமரரின் பிரிவால் துயரடையும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

''ஓம் சாந்தி''

தலைவர், பணிப்பாளர், பணியாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை. (சி/52931)

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி பலநோ. கூ.சங்கத்தின் முன்னாள் வர்த்தக முகாமையாளரும் பொது முகாமையாளரும் தற்போது தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளருமாகிய

**சோமசுந்தரம் ஸ்ரீதரன்**

அவர்கள் 12.07.2007 அன்று இறைபதமடைந்தமையயிட்டு எமது துயரத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம். (சி/52933)

## வீடு,கடை வாடகைக்கு

கல்வியங்காடு, ஜி.பி.எஸ் வீதியில் சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்ப அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. கல்வியங்காடு, பருத்தித்துறை வீதி, 3 ஆம் கட்டையடியில் கடை வாடகைக்குண்டு.

(62694) தொடர்பு: S.சுஜிதன் T.P. : 222 8203.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: **எஸ்.கே.சேல்ஸ் சென்ரர்**, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P. 0775591366. (62684)

## சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை - 2007

* பரீட்சைக்கான வினாத்தாள் மீட்டல்.
* பரீட்சையில் உயர்புள்ளி பெறத்தக்க வழி காட்டல்.

ஆரம்பம் 17-7-2007 (செவ்) 3.00 p.m.
சனி, ஞாயிறு 9 a.m.

பிறைற்மன் கல்வி நிலையம்,
நீராவியடி பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (62715)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகான மணமகனுக்கும் (வயது-42), இங்கிலாந்து உயர்கல்வியுடன் அங்கு உயர்பதவி வகிக்கும் தம்பியாருக்கும் (வயது-39) தகுந்த மணமக்களை எதிர்பார்க்கின்றார்கள். மாற்றுச்சம்பந்தத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். சிறந்த சீதனம் கொடுக்கப்படும்.

**விளம்பர இல. 2992,**
**மே/ப உதயன்** (62714)

## The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)

வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)


[illegible]

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

## ஈரவிழிகளில் ஈராண்டுகள்...



அமரர்

**சின்னத்தம்பி மார்க்கண்டு**

மண்ணில் : 30.01.1924
விண்ணில் : 08.07.2005
*திதி தினம் : 16-07-2007*

ஈரவிழிகள் – காய்ந்து போனாலும்...
ஈராண்டுகள் ... ஓடி மறைந்தாலும்...
ஊரும் உறவும் தேடும் வேளை...
ஓராயிரம் நினைவுகள் நாடும் எம்மை!

*39/7 (15/3), புதுவீதி,*
*கொய்யாத் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(62724) **குடும்பத்தினர்.**

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

898 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் **03 16 32 44**

**13-07-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5040927 - 5055900

ஜக்பொட் பரிசு ரூபா. 6,366,925/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 331,202 | 10/- | 3,312,020/- |
| 2 இலக்கங்கள் | 30,440 | 20/- | 608,800/- |
| 1 இல. + லக்கினம் | 30,078 | 30/- | 902,340/- |
| 2 இல. + லக்கினம் | 2,776 | 100/- | 277,600/- |
| 3 இலக்கங்கள் | 817 | 500/- | 408,500/- |
| 3 இல. + லக்கினம் | 77 | 5,000/- | 385,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 6,366,925/- | 6,366,925/- |
| மொத்தம் | | | 12,561,185/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 395,399 | | 13,584,685/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4166908 க்கு மேற்பட்ட இல. கொண்ட டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 5050245-7-89 |
| நுவரெலியா | 5042318-5-23 |
| கொழும்பு | 5055090-8-43 |
| கண்டி | 5051741-1-73 |
| பதுளை | 5042209-8-31 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## இறைச்சிக் கோழி (உயிர்) விற்பனைக்குண்டு

**உயிர் இறைச்சிக் கோழிகள் (Broiler) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

| | | |
|---|---|---|
| **சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ்** ஆனைக்கோட்டைச் சந்தி. தொ.பே: 077 6138978 | **வீனஸ் பாம்** பலாலி வீதி, திருநெல்வேலி. | **அராலி கோழிப் பண்ணை** அராலி மத்தி, அராலி. |
| **வீனஸ் விற்பனை நிலையம்** அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி. தொ.பே: 0776941693 | **ஆதவன் விற்பனை நிலையம்** 328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 8418 | **நெதேன் விற்பனை நிலையம்** ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. |

**குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.**

(62607)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கலப்பின குஞ்சுகள் 1,7,15 நாள், ஒரு மாதம், 2மாதம் வளர்ச்சியடைந்த குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
ச.ஜெகன்
கோண்டாவில் - இருபாலை வீதி,
கொவ்வாலை லேன்,
கோண்டாவில். (62715)

## தவறிவிட்டது

கைதடி, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த செல்வாட்ணம் மதியழகன் என்பவருடைய கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், விசேட அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பாக் 13.07.2007 வெள்ளிக் கிழமை திருநெல்வேலிக்கும் – கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கனகா பத்திரிகை விற்பனை நிலையம், திருநெல்வேலிச்சந்தி [illegible] ஒப்படைத்தவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62764)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தடுமாறும் பொருளாதாரத்தை புலிகள் மேலும் தள்ளாட வைக்கலாம்

மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளில் இலங்கைத்தீவு மூழ்கும் பேராபத்து சூழ்ந்து வருகின்றது. ஆனால் அந்தப் பேரிடர் பற்றிய விடயங்களை மூடி மறைத்து, தென்னிலங்கை மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, இராணுவ வெற்றிகள் பற்றிய முழங்கல்களையும், பிரகடனங்களையும் முன்வைக்கின்றது கொழும்பு அரசு.

இராணுவ வெற்றிகள் பற்றிய மாயைகள் கலைந்து, ஆரவாரங்கள் அடங்க, வயிற்றை - வாழ்வை - பிடுங்கும் அன்றாடப் பிரச்சினைகள் தம்மை பிணியாகப் பீடித்து உறுத்துவதை மக்கள் உணர்ந்தேயாக வேண்டியிருக்கும். அப்போதும் அவர்கள் கவனத்தைத் திசை திருப்பி, வேறுபுறம் சிரத்தையை வழி நடத்துவதற்காகப் புதிய ஆரவாரங்களை அரசு தேடும்.

தென்னிலங்கை மக்கள் ஏமாளிகளாக இருக்கும் வரை இவ்வாறு அவர்கள் தலையில் மிளகாய் அரைக்கும் அரசியல் தலைமைகளின் அபத்த நாடகம் வெற்றிகரமாகத் தொடரும்.

ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் அரசுத் தலைமையின் இந்த ஏமாற்று நாடகம் நீண்ட காலம் தாக்குப் பிடிக்காது என்பது போலவே தோற்றுகின்றது.

மக்களின் அன்றாட வாழ்வை மோசமாக - மிக மோசமாக - பாதித்து நிற்கின்றன வாழ்வாதாரப் பிரச்சினைகள். விலைவாசி உயர்வு எல்லை மீறிவிட்டது. வாழ்க்கைச் செலவு சாதாரண மக்களின் கைக்கு எட்டாத உயரத்துக்கு எகிறிவிட்டது. மக்களின் பற்றி எரியும் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு காணும் உருப்படியான திட்டங்களோ, தீர்க்க தரிசனமான தந்திரோபாயங்களோ அரசுத் தலைமையிடம் இல்லவே இல்லை என்பதைத் தென்னிலங்கை மக்கள் புரியத் தலைப்பட்டு விட்டனர்.

வெறும் இராணுவ வெற்றிகள் பற்றிய பீற்றல்களும் ஆரவாரங்களும் தமது அன்றாட வயிற்றுப் பசிப் பிரச்சினையைத் தீர்க்கமாட்டா - என்பதைப் புரிந்துகொண்டு, அரசுக்கு எதிராகப் குழம்பும் நிலைக்குத் தென்னிலங்கை மக்கள் வந்துவிட்டனர்.

தொப்பிகல காடு மீட்கப்பட்டதை வைத்துக்கொண்டு பெருத்த எடுப்பிலான பிரசாரத்தை முன்னெடுக்க அரசுத் தலைமை எடுத்த முயற்சிக்கு, ஆரம்பக் கட்டத்திலேயே முட்டுக்கட்டைகள் வந்துவிட்டன என்று கூறப்படுகின்றது.

இலங்கையில் கடந்த இருபத்தியைந்து ஆண்டு கால உள்நாட்டு யுத்த சரித்திரத்தில் தொப்பிகல பிரதேசத்தை அரசுப் படைகள் கைப்பற்றி மீட்டமை இதுவே முதல் தடவை என்ற சாரப்பட பிரசாரத்தை முன்வைத்து, அதை அரசின் பெரும் இமாலய வெற்றியாகக் காட்ட அரசு முயன்றது. ஆனால் உண்மையைப் போட்டுடைத்து அந்த முயற்சிக்கு ஆப்பு வைத்துவிட்டது பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கட்சி.

1992 இலும் பின்னர் 1994 இலும் இரண்டு தடவைகள் தொப்பிகல காட்டுப் பகுதியைப் புலிகளிடமிருந்து அரசுப் படைகள் மீட்டன என்பதை இராணுவ ஆவணங்களுடன் நிரூபித்திருக்கின்றது அக்கட்சி.

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதியை மீண்டும் புலிகளிடம் பறிகொடுத்ததே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரச நிர்வாகம்தான். அதுவும் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக இடம்பெற்றிருந்த ஆட்சியே தொப்பிகலவைப் புலிகளிடம் மீண்டும் இழந்தது. தமது ஆட்சிக்காலத்தில் தாங்கள் இழந்த காட்டுப் பிரதேசத்தை மீண்டும் கைப்பற்றி விட்டு, இந்த ஆட்சித் தலைமை ஒன்றுமில்லாமல் வெறும் ஆரவாரம் பண்ணுகின்றது என்று ஐ.தே.க. அம்பலப்படுத்திய விவகாரம், ஆளும் தரப்பின் பீற்றல் பிரசாரத்துக்கு வேட்டு வைத்திருக்கின்றது.

தொப்பிகல சமர் குறித்து புலிகள் தரப்பும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கும் இதுதான் காரணம் என்று கூறப்படுகின்றது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைத் தரப்பினரிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இதனை சாடைமாடையாகக் கோடிகாட்டினார் என்றும் கூறப்படுகின்றது.

''இது (தொப்பிகல) நாங்கள் இப்போதுதான் இழக்கும் பிரதேசம் என்பது அல்ல. தொண்ணூறுகளின் முற்பகுதியிலும் இரண்டு தடவைகள் இப்பிரதேசத்தை இழந்து பின்னர் நாம் மீட்டெடுத்திருக்கின்றோம். இப்போது தந்திரோபாய ரீதியில் அதை நாம் இழப்பது அப்படி ஒன்றும் பெரிய விடயம் அல்ல. மீண்டும் அது கைமாறும். காலம் கனியும்வரை பொறுங்கள். நடப்பதைப் பார்த்திருங்கள்.'' - என்ற சாரப்பட தமிழ்ச்செல்வன் கூறினார் எனத் தெரிகின்றது.

நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இன்றைய நிலையில், அதைச் சீர்செய்யும் சிந்தனைப் போக்கு ஏதுமின்றி, அற்ப இராணுவ வெற்றிகளை ஆரவாரப்படுத்தி மகிழ்வதில் கொழும்பு அரசு ஒரே நிலைப்பாடாக இருக்கையில் -

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ, பொருளாதார நிலைகளை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்படும் என விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் எச்சரிக்கை மிகுந்த கவனத்துக்குரியதாகின்றது.

இத்தகைய இலக்குகளைத் தாக்குவதில் புலிகள் வெற்றி காண்பார்களாயின் இலங்கைத்தீவின் பொருளாதாரம் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகி விடும் என்பது திண்ணம்.

## நாவலர் வீதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை16

நாவலர் வீதியில் செட்டித் தெருவுக்குச் சமீபமாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பாலசிங்கம் பாலச்சந்திரன்(வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

நாவலர் வீதியூடாக தனது தாயார் வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தி சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (அ-1-203-78)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் நவோதய பாடசாலை வார நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான வே.தி.செல்வரத்தினம் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆங்கில பாட செயற்றிட்டத்தினை முன்னெடுப்பது தொடர்பான விரிவுரைகள் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை16

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பருத்தித்துறை பிரதேச சபைப் பொது நூலகத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தகக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.பசுபதி தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை பருத்தித்துறைப் பிரதேச சபையின் இளைப்பாறிய பிரதம நூலகர் ஏ.என்.எஸ். திருச்செல்வம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இப்பிரதேச சபைப் பகுதியில் சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பனவற்றில் சுகாதாரப் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. (1-202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை16

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சி, அரும்பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கு என்பனவற்றை நடத்தவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் த.மஞ்சுளாதேவி கலந்துகொள்வார். (203)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 1 | செவ்வாய்க்கிழமை 17.07.2007 |
| திதி : திருதியை | மாலை 05.53 |
| நட்சத்திரம் : மகம் | முழுவதும் |
| சுபநேரம் | : 10.30 - 12.00 |
| ராகுகாலம் | : 03.30 - 04.30 |

## நிவாரணத்துக்கென வந்த கோதுமை மா களஞ்சியத்துக்கு திரும்பப் பெறப்பட்டது

### பழுதடைந்ததாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

நிவாரண விநியோகத்திற்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளுக்கு வழங்கப்பட்ட கோதுமை மா மூடைகள் தென்மராட்சிப் பிரதேச செயலரின் உத்தரவின் பேரில் மீளப் பெறப்பட்டுள்ளன.

சங்கக் கிளைக் கடைகளில் பழுதடைந்த கோதுமை மா விநியோகம் செய்யப்படுவதாக பொதுமக்கள் பிரதேச செயலருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து மா மூடைகள் மீளப்பெறப்பட்டன. கிளைக் கடைகளிலிருந்து மா மூடைகள் திரும்பவும் களஞ்சியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக உணவுத்திட்ட நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டு அண்மையில் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட மா மூடைகளே பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-207)

## நூல்கள் கொள்வனவு செய்ய வலி.மேற்கு பிரதேச சபைக்கு நிதி

வலி.தென்மேற்கு,ஜூலை16

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பொது நூலகங்களுக்கு புதிய நூல்களை கொள்வனவு செய்வதற்கென பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு சபையின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டுவரும் சுழிபுரம் பொது நூலகம், சங்கானை பட்டின பொது நூலகம், வட்டுக்கோட்டை பொது நூலகம், அராலி பொது நூலகம் ஆகியவற்றுக்கு புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்கொள்ளப்பட்டு வருவதாக சபையின் செயலாளர் இ. இராசதுரை தெரிவித்தார்.

இதேவேளை -

மேற்படி திட்டத்தின் பிரகாரம் வட்டுக்கோட்டை சந்தை புனரமைப்புக்கென ஐந்து லட்சம் ரூபாவும் சுழிபுரம் சத்தியகாடு பொதுச் சந்தை எல்லைச் சுவர் தொடர் வேலைக்கு 31/2 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-135)

## அரிசி ஆலை 'பெல்ற்'றில் சிக்கிய மாணவனின் கை துண்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை16

அரிசி ஆலையில் நெல் குற்றுவதை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் இயந்திர 'பெல்ற்'றில் அகப்பட்டு இயந்திரச் சக்கரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு கை துண்டிக்கப்பட்ட சம்பவம் கரணவாய், சோளங்கன் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்றது.

மாணவன் வைத்திருந்த பை திடீரென 'பெல்ற்'றில் அகப்பட்டதால் இந்த விபரீதம் நடைபெற்றது.

சோளங்கனைச் சேர்ந்த கோபால சண்முகம் ஹரிதரன் என்ற 15 வயது மாணவனே இவ்வாறு விபத்துக்கு உள்ளானவர் ஆவார்.

நெல்குற்றும் இயந்திரம் உரிய பாதுகாப்பு அடைப்பு இடப்படாமல் இருந்தமையும் இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டது.

கை துண்டிக்கப்பட்ட நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ-1-207)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜூலை 16

தென்புலோலி உபயகதிர்காமம் தான்தோன்றீஸ்வர சக்கர சண்முகர் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-160)

* * *

வடமராட்சி,ஜூலை16

மேலைப்புலோலி ஆலடிப்பிள்ளையார் ஆலயப் பெருந் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-160)

* * *

வடமராட்சி,ஜூலை16

அல்வாய் கிழக்கு மாலி சந்திப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்கிழமையும் இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்மாகி நடைபெற்று வருகின்றது. (203-160)

* * *

வட்டு. கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்மாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 28ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவீழாவும் இடம்பெறும். (203-29)

* * *

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.05 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 16

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய அலங்காரத் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 17 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி பழனி வேல் நகர்ப்பவனியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1-207)

* * *

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கள் காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (151)

* * *

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாளும் நடைபெறவுள்ளன. (151)

## மரம் கடத்திய இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை16

அனுமதிப்பத்திரம் இன்றி மரங்கள் ஏற்றிச் சென்ற இரு வாகனங்களை சாவகச்சேரி பொலீஸார் வீதிச் சோதனையின் போது மறித்துப் பிடித்துள்ளனர்.

குறிப்பிட்ட இரு வாகனங்களின் சாரதிகளும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான், இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மரங்கள் தறித்து வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக நீதிமன்றுக்கு முறைப்பாடு கிடைத்ததை அடுத்து, அனுமதிப்பத்திரமின்றி மரங்கள் ஏற்றிச் செல்வது பிரதேசத்தில் தடை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொப்பிகல

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவரது வாராந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் வருமாறு -

விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் முகாம்களை கொண்டிருந்தனர். அவர்கள் பெரும் பகுதியைக் கொண்டிருக்காத போதிலும் இராணுவத்தினர் நடவடிக்கையை மேற்கொள்கொள்ளும் போது வெளியேறிவிட்டு பின்னர் இராணுவத்தினர் வெளியேறியதும் மீண்டும் வந்துவிடுவார்கள்.

அதனால்தான் 2002ஆம் ஆண் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டிலும் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான எல்லைகள் கிழக்கில் தெளிவாக பிரிக்கப்பட்டிருக்கவில்லை.

கண்காணிப்புக் குழுவின் துணையுடன் பல முயற்சிகள் செய்யப்பட்டபோதிலும் வடக்கைப் போன்று கிழக்கில் பகுதிகள் பிரிப்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

அண்மையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் கூட்டத்தில் தொப்பிகல மீதான நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளை தப்ப முடியாதபடி பெட்டி வடிவில் சுற்றிவளைத்திருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகளுக்கு தப்பும் வழி இருக்கப் போவதில்லை. அவர்கள் இராணுவத்தினருக்கு இரையாகப் போகின்றனர். அவர்களுக்கு பேரழிவு நிச்சயம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

ஆனால் விடுதலைப் புலிகள் பெருமளவான தமது இராணுவத் தளபாடங்களுடன் அங்கிருந்து இலகுவாக அகன்றுவிட்டனர்.

தொப்பிகலவில் பெருந்தொகையான புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவத்தினர் மிகைப்படுத்தியிருந்தமைக்கு முரணாக பெருமளவான விடுதலைப் புலிகளை கொல்லாதபோது அல்லது அவர்களின் இராணுவ இயந்திரத்தை அழிக்காத போது அந்த வெற்றியில் உண்மையில்லை. (அ-1)

## தொப்பிகல வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைப்பதற்காகவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற அறிவிப்பை அரசு விடுத்து வருகின்றது.

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிராக முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, சூரியராய்ச்சி ஆகியோர் இணைந்து மேற்கொண்டுவரும் போராட்டத்தின் கவனத்தை திசை திரும்புவதில் அரசின் மத்திய புள்ளியாக விளங்குவது தொப்பிகல கைப்பற்றப்பட்டதே ஆகும்.

தொப்பிகல மீதான தாக்குதல் முடிவடைந்த பின்னரும் ஒரு மாதம் வரையிலும் அதன் வெற்றிச் செய்திகளை முக்கியப்படுத்துமாறு அரச ஊடகங்கள் அறிவுறுத்தப்பட்டன. அரசு எப்படி தொப்பிகலவை தனது அரசியல் நலனுக்காக விற்பனை செய்யப் போகின்றது என்பது இதன் மூலம் புலனாகின்றது. - என்றுள்ளது. (அ-1)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட பின்னர், தவசிக்குளம் பகுதிக்கு அவர்களது சடலங்கள் கொண்டு வரப்பட்டு போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் பொலிஸார் வெளியிட்டனர்.

ஒரு சடலம் பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுவனுடையது என்றும் மற்றது சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு வருடையது என்றும் கூறப்பட்டது. மற்றைய இரண்டும் முறையே நாற்பத்தியைந்து, முப்பது வயதுடையவர்களுடையவை என மதிப்பிடப்பட்டது. இவர்கள் முஸ்லிம் களாக இருக்கலாம் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இனந்தெரியாதோரின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் வீதியோரத்தில் போடப்படும் பயங்கரம், வவுனியாவில் சில மாதங்களாகக் குறைந்திருந்த பின்னணியில், மீண்டும் அதிர்ச்சி தரும் இவ்விடயம் இடம்பெற்றிருப்பது வவுனியா மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும் பீதியையும் கிளப்பியிருக்கிறது.

வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் சடலங்கள் கிடந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சடலங்களை அடையாளம் காண்பதற்காக வவுனியா தள வைத்தியசாலைப் பிரேத அறையில் வைத்திருக்க அவர் உத்தரவிட்டார். (சி)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடுருவும் நடவடிக்கையை மேற்கொண்டபோது அதனைத் தாம் முறியடித்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயின் சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் ரி 56 வகைத் துப்பாக்கி ஒன் றும் தொலைத்தொடர்புக் கருவி ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 . 10 . 1927



ஆண்டவன் அடியில் 26 . 06 . 2007

**அமரர் கோபாலசுந்தரம் பரஞ்சோதி**

**26.07.2007 ஆந் திகதி மறைந்த கோபாலசுந்தரம் பரஞ்சோதி அவர்களின் 21ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (16.07.2007) திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*சிவசோதி பவனம்,*
*அல்வாய் வீதி, உடுப்பிட்டி.* - குடும்பத்தினர்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல் லம், நாடாளுமன்ற வளாகம், கடுவெலவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகள் ஆகியவை இந்த புதிய அதி உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில் வாகனங்களை நிறுத்துதல் உள்ளிட்ட செயற்பாடுகள் ஏற்கனவே தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

இதனிடையே நாடாளுமன்ற வளாகப் பகுதியில் உயரிய கட்டடங்கள் கட்டப் படக்கூடாது என்பதையும் மீறி கட்டடங்கள் கட்டுவதனால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனையின் மகப்பேற்று விடுதி மற்றும் வெளிநோயாளர் பிரிவு என்பன பேரழிவுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளன என்று கூறப்படுகின்றது. அருகிலிருந்த மக்கள் குடியிருப்பும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மருத்துவமனைக்கு அருகிலேயே ஆசிரியர் வள நிலையம், புளியங்குளம் இந்துக் கல்லூரி மற்றும் குடியிருப்புகள், கடைத் தொகுதிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தொப்பிகல வெற்றிக்கான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் எங்கும் இருப்பார்கள். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலையில் நாம் நிலைகொண்டுள்ளோம். ஆனால் உங்களுக்குத் தெரியாது.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது இனப் படுகொலைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இதற்குப் பதிலடியாக எமது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி இனப் படுகொலையிலிருந்து எமது மக்களைப் பாதுகாப்போம்.

தொப்பிகல வெற்றிநிகழ்வை கொண்டாடுகின்றது மஹிந்த ராஜபக்ஷ அரசு. இதற்கான பரிசு புலிகளிடம் நிறையக் காத்திருக்கின்றன.

தொப்பிகலவில் கடந்த 15 ஆண்டு காலமாக எதுவித நிரந்தர இராணுவ முகாமையும் நாங்கள் அமைத்திருக்கவில்லை. தொப்பிகல வெற்றி என்று அரசு அறிவித்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அது ஒன்றும் பாரிய தோல்வி அல்ல.

கிழக்கில் தங்களது படைப் பலத்தை விரிக்கவேண்டிய நிலை அரசுக்கு உருவாகியுள்ளது. அவர்களால் அங்கிருந்து வடக்குக்கோ இதர பகுதிகளுக்கோ எளிதில் நகர்ந்துவிட முடியாது. தொப்பிகலவை எத்தனை காலம்தான் தக்கவைப்பார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

தொப்பிகல என்பது ஒரு மலைப் பிரதேசம். அதனைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமாயின் ஆளணி மற்றும் வளங்களை வீணடிக்க வேண்டியிருக்கும். மலைகளை ஊடுருவிச் செல்ல இலங்கை இராணுவம் விரும்புவதில்லை. அந்தப் பிரதேசத்தைச் சில படையணிகளால் மட்டுமே பாதுகாத்துவிட முடியாது.

தொப்பிகலவில் தற்போது இரு படையணிகள் மட்டுமே இருக்கின்றன என்று கேள்விப்படுகின்றோம். இந்த இரு படையணிகளால் நீண்ட காலத்துக்கு தொப்பிகலவைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது.

கிழக்கில் அரசு தேர்தலை நடத்தினாலும் அங்கு ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடைபெறாது. பெரும்பாலான மக்கள் தேர்தலில் பங்கேற்பதை விரும்பவில்லை. கிழக்கில் தன் கட்டுப்பாட்டைக் காட்டுவதற்கு மஹிந்த அரசு முயற்சிக்கின்றது- என்றார். (சி)


### விற்பனைக்கு

வீட்டிற்கு பயன்படுத்திய ஜன்னல், ஜன்னல் கிறில், ஜன்னல் நிலை, கதவு நிலை, தீராந்திகள் (முதிரை, பாலை), கொமட் போன்றன விற்பனைக்கு உண்டு. திங்கள், வெள்ளி, புதன் 10 மணிமுதல் 2 மணிவரை பார்வையிடலாம்.

இல. 105 அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5889

### இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

MCS
Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 20-07-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்


## சுதந்திரதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெப்டினல்ட் ஜெனரல் சரத் பொன்சேகா உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியுடன் முப்படைத்தளபதிகளும், சிரேஷ்ட படை அதி காரிகளும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வுக்கு வருகை தரும் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும். சுமார் எண்ணூறு படையினர் பங்குகொள்ளும் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி அங்கு ஏற்றுக்கொள்வார்.

மாவட்ட மட்டத்திலான நிகழ்வுகள் பாடசாலைகள், அரச திணைக்களங்கள் போன்றவற்றில் அதே தினத்தில் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின் றன.

திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், நிறுவனத் தலைவர்கள் இந்நிகழ்வுக்குத் தங்கள் தங்கள் இடங்களில் தலைமைதாங்கிச் செயற்பட வேண்டும் என்று அரசால் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களுக்கு 1995இல் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட வெற்றியை விடவும் தொப்பிகல கைப்பற்றப்பட்டமை பாரிய வெற்றி என் றும் கடந்த கால வெற்றியுடன் இந்த வெற்றியை ஒப்பிட முடியாது என்றும் விளக்கமளிக்குமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டா ளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (சி)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளின் ஏற்பாட்டை ஆட்சேபித்து தாம் உண்ணாவிரதப் போராட்டத்தைஆரம்பித்ததாகதமிழ்க்கைதிகள் தெரிவித்துள்ள னர்.

சிறைக்கைதிகளை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அவர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-1)

## கொழும்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தபடி எதனை யும் செய்ய இயலாது.

கொழும்பு நகரமானது பாதுகாப்புத் தரப்பினரால் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகருக்காக நன்கு பாதுகாக்கப்பட்ட திட்டமிடல்களை வைத்துள்ளோம். இப்போதும் முன்னரும் பயங்கரவாதிகளின் சதிகளை முறியடித்துத் தளபாடங்களையும் நாம் கைப்பற்றியிருக்கின்றோம் - என்றார். (சி)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கும் வகையிலான திட்டம் ஒன்றை முன்வைக்கவேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் மேற்கொண்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## கண்ணீர் அஞ்சலி

**வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர்**
**சி.ரங்கர்ராஜாவின் அன்புத் தாயார்**

**திருமதி**

**சிவகுருநாதன் ரோகினி அம்மா**

**அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*திட்டப் பணிப்பாளரும்*
*அலுவலர்களும்,*
**வடக்கு கிழக்கு விடமைப்பு**
**புனர்நிர்மாணத் திட்டம்,**
**திருகோணமலை.**

(சி-52939)

*பிரதித் திட்டப் பணிப்பாளரும்*
*அலுவலர்களும்,*
*மாவட்ட முகாமைத்துவப் பிரிவு,*
**வடக்கு கிழக்கு விடமைப்பு**
**புனர்நிர்மாணத் திட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### *கந்தசாமி பாக்கியம்*



புத்தூர் கிழக்கு, வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாக்கியம் 15.07.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், தாமோதரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், தம்பையா, பொன்னம்மா காலஞ்சென்ற மகாலிங்கம் காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் இரனத்தினம், நேசம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், செல்வராசா, சிவநேசயம், பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனியும் இந்திராணி, ஞானசேகரம் (முகாமைத்துவ உதவியாளர், யாழ்.மாநகர சபை), கணேசநாதன் (கனடா), வசந்தி, வசந்தன் (சுவிஸ்), ஜேந்தி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவானந்தராஜா (சுவிஸ்), சரஸ்வதிதேவி (நூலக உதவியாளர்), விஜயபாக்கியலட்சுமி (கனடா), தவசேகரசிங்கம், அனுந்தினி (சுவிஸ்), பாலகணேசன் (டென்மார்க்) ஆகியோரின் மாமியும் ராஜினி (சுவிஸ்), ராதாகரன், நிரோஜினி, சிவராகுலன், சுயாதரன் (கனடா), கருணாதரன் (இந்தியா), சுயதர்சினி, சுஜிதரன், சிந்துஜா (கனடா), நிவேதா (கனடா), ரனித்தா, கவிதா, ஸ்ரீரூபி, துஷிகரன், துஷித்தா, துஷியந்தன், மதுமிதா (சுவிஸ்), மதுசன் (சுவிஸ்), அபிசன் (சுவிஸ்), நிருசன் (சுவிஸ்), தணிகவாசன் (டென்மார்க்), கீர்த்தனா (டென்மார்க்), பவித்தனா (டென்மார்க்க) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கௌதமன், நிருத்திகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலகடி ஒழுங்கை கோப்பாய்*
*வடக்கு, கோப்பாய்.* (62730)

தகவல்:
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.